O.S. No. : 82/2015

Dated: 29.04.2026

**பி.வா.சா.2: சந்திரன் ; த/பெ. ரங்கைய்யா**

**(1 முதல் 3, 8 மற்றும் 9 பிரதிவாதிகள் தரப்பில் இந்த சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை என்று கூறியதால் அவர்கள் தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது).**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உதகமண்டலம் நகரம் R.S. No. 1535-ல் எனக்கு பூமி உள்ளது என்றால் சரிதான். எனது பூமிக்கு தெற்கில் K.P. ராஜு என்பவரது பூமி உள்ளது என்றால் சரிதான், அந்த பூமி சுமார் 10 முதல் 15 அடி உயரத்தில் உள்ளது. மேற்படி K.P. ராஜு என்பவரிடமிருந்து பூமியை கிரையமாக பெற்று வாதி தேகுரம்மா என்பவர் அதில் வீடு கட்டியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு விடுதலை பத்திரம் மூலம் பாத்தியப்பட்ட 83 சென்ட் பூமியில் நான் 2000 ஆண்டுவரை விவசாயம் செய்து வந்தேன் என்றால் சரிதான், நான் அந்த பூமியில் 1944 ஆம் ஆண்டிலிருந்தே விவசாயம் செய்து வந்தேன்.

2. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தற்போது இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். 1 மற்றும் 2 பிரதிவாதிகள் இறப்பதற்கு முன்புவரை அவர்களது பூமியில் விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல, 1 ஆம் பிரதிவாதியின் தந்தைதான் விவசாயம் செய்து வந்தார், 1 ஆம் பிரதிவாதி அங்கு குடி மட்டும்தான் இருந்தார். K.P. ராஜு என்பவரது பூமிக்கு மேற்கில், வாதியின் வீட்டை ஒட்டி தம்பன்னன் என்பவரது பூமி உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது பூமியை ஒட்டியிருந்த மற்ற பெரும்பாலான பூமிகளில் 2000 ஆம் ஆண்டுவரை விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். நான்

எனது பூமியில் 2000 ஆம் ஆண்டுதான் முதல் முதலில் மனையிடங்கள் பிரித்து விற்பனை செய்ய ஆரம்பித்தேன் என்றால் சரிதான். நான் எனது விவசாய பூமியை மனையிடங்களாக பிரித்து விற்பனை செய்வதற்கு உரிய துறையில் அனுமதி பெற்றேனா என்றால் இல்லை. நான் எனது பூமியை 16 மனையிடங்களாக பிரித்து விற்பனை செய்து வருவதாக எதிர்வழக்குரையில் கூறியுள்ள நிலையில் எனது பூமியை சுற்றி நான் சுற்றுச்சுவர் கட்டியுள்ளேனா என்றால் இல்லை.

**(வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**

Loganathan Prakash

Digitally signed by Loganathan Prakash
Date: 2026.04.29 12:27:09 +0530